**செப்டம்பர் – 14**

# TNPSC துளிகள்

- இன்ஜினியர்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனமானது, அசாமின் நுமாலிகரில் இந்தியாவின் முதல் மூங்கில் அடிப்படையிலான உயிரிச் சுத்திகரிப்பு மையத்தினை நிறைவு செய்துள்ளது.
- இந்தியாவின் 15வது குடியரசுத் துணைத் தலைவராக சந்திரபுரம் பொன்னுசாமி இராதா கிருஷ்ணன் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று இந்தியாவின் 15வது குடியரசுத் துணைத் தலைவராகவும், மாநிலங்களவைத் தலைவராகவும் பதவியேற்றார்.
- ரஷ்யாவின் நிஷ்னியில் நடைபெற்று வரும் ZAPAD 2025 எனும் பலதரப்பு இராணுவப் பயிற்சியில் இந்திய இராணுவம் பங்கேற்றுள்ளது.
- டியெல்லா (அல்பேனிய மொழியில் 'சூரியன்' என்று பொருள்) என்ற 'செயற்கை நுண்ணறிவு அமைச்சரை' நியமித்த உலகின் முதல் நாடாக அல்பேனியா மாறி உள்ளது என்பதோடு மேலும் அது ஊழலை எதிர்த்துப் போராடும் பணியில் ஈடுபட்டு உள்ளது.
- இந்தியா தனது முதல் வெளிநாட்டு அடல் புத்தாக்க மையத்தை (AIC) டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினுடைய அபுதாபி வளாகத்தில் திறந்து வைத்துள்ளது.
- பெங்களூருவின் விதான் சௌதாவில் இந்திய பிராந்தியத்திற்கான காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் (CPA) 11வது மாநாடு நடைபெற்றது.
    - இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலானது "சட்டமன்றங்களில் விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்: மக்களின் நம்பிக்கையை வளர்ப்பது, மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்" என்ற கருத்துருவில் நடைபெற்றது.
- காற்று மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை செப்டம்பர் 07 ஆம் தேதியை சர்வதேச நீல வானத்திற்கான தூய்மையான காற்று தினத்தை நியமித்தது.
- இமயமலைச் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பிராந்தியத்தைப் பாதுகாப்பதற்காக உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 09 ஆம் தேதியன்று இமயமலை திவாஸ் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## புத்தொழில் நிறுவனங்களுக்கான மாநில அளவிலான முகப்புப் பக்கம்

- புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கங்களுக்கான மாநில அளவிலான முகப்புப் பக்கம் ஒன்றை உருவாக்க சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது Guidance Tamil Nadu முகமையுடன் உடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- இந்தத் தளமானது தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவன சூழல் அமைப்பின் விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது மற்றும் பல்வேறு பங்குதாரர்களுக்குப் புத்தாக்கத் திறனை வெளிப்படுத்துகிறது.
- Guidance Tamil Nadu என்பது முதலீட்டு ஊக்குவிப்புக்கான தமிழ்நாடு அரசின் முதன்மை நிறுவனமாகும்.

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் சுமார் 19,000 புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன.
- இந்தப் புத்தொழில் நிறுவனங்கள் கூட்டாக 2.2 லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன மற்றும் 1,20,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளை ஈர்த்துள்ளன.
- ஒவ்வொன்றும் 200 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட முதலீட்டை ஈர்த்துள்ள 45 புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன.
- மாநிலத்தில் 228 செயலில் உள்ள தொழிற்காப்பு மையங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களை செயல்படுத்தும் நிறுவனங்கள் உள்ளன என்பதோடு இது இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத மிகப்பெரிய எண்ணிக்கையாகும்.




## பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் – தமிழ்நாடு




- 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 100,000 பிறப்புகளுக்கு 38 ஆக இருந்த தமிழ்நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது 35 ஆகக் குறைந்துள்ளது.
- இரண்டும் முறையே 30 MMR விகிதத்தினைக் கொண்டுள்ள கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு தற்போது இந்தியாவில் இரண்டாவது மிகக் குறைந்த MMR விகிதத்தினைக் கொண்டுள்ளது.

- 2021–2023 ஆம் ஆண்டின் இந்தியாவில் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு குறித்த சிறப்பு தகவல் குறிப்பின் படி, தேசிய MMR ஆனது 100,000 பிறப்புகளுக்கு 88 ஆக உள்ளது.
- சமீபத்திய மாநிலச் சுகாதாரத் துறைத் தரவுகளின்படி, 2023 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாட்டின் MMR 45.5 ஆகக் குறைந்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஸ்வச்சோத்சவம் 2025





- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை ஆகியவை இணைந்து ஸ்வச்சோத்சவம் (SHS) 2025 பிரச்சாரத்தின் கீழ் ஸ்வச்சோத்சவம் என்ற இருவார அளவிலான நிகழ்ச்சியைத் தொடங்க உள்ளன.
- SHS 2025 பிரச்சாரம் ஆனது, தூய்மையான மற்றும் பசுமையான கொண்டாட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் பண்டிகை காலத்துடன் இணைந்தவாறு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 02 ஆம் தேதி வரை நடைபெறும்.
- இது சமூக ஈடுபாடு, கலாச்சாரச் சீரமைப்பு மற்றும் நிலையான சுகாதார விளைவுகளுக்காக துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவின் HIRE சட்டம்

- HIRE சட்டம் (சர்வதேச வேலைவாய்ப்பு இடமாற்றத்தை நிறுத்துதல் சட்டம்) 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அமெரிக்கக் குடியரசுக் கட்சி செனட்டர் பெர்னி மோரேனோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த மசோதா மற்ற நாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை ஒப்பந்த சேவை அமர்த்தம் / புறத்திறனீட்டம் செய்யும் அமெரிக்க நிறுவனங்களுக்கு 25% வரி விதிக்க முன்மொழிகிறது.
- முன்மொழியப்பட்ட இந்தச் சட்டம் தகவல் தொழில்நுட்ப (IT) புறத்திறனீட்டம் உள்ளிட்ட சேவைத் துறையை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்திய IT நிறுவனங்கள் தங்கள் ஏற்றுமதி வருவாயில் தோராயமாக 62% அமெரிக்காவிலிருந்து பெறுகின்றன.

- வன்பொருள் உட்பட இந்திய IT துறையின் மொத்த ஏற்றுமதி வருவாய் 224 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2023–24 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் அமெரிக்கா 17.7% பங்கைக் கொண்டிருந்தது.
- 2024 ஆம் நிதியாண்டில் இந்தியா அமெரிக்காவுடன் 45.7 பில்லியன் டாலர் வர்த்தக உபரியைக் கொண்டிருந்தது என்ற நிலையில் இதில் 38 பில்லியன் டாலர் மதிப்பிலான சரக்குகள் வர்த்தகமும் அடங்கும்.
- இந்திய IT துறை ஆசியா, ஆஸ்திரேலியா, நோர்டிக் நாடுகள், ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்துகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## SIDBI-CRIF அறிக்கை 2025

- இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) மற்றும் CRIF High Mark ஆகியவற்றால் இணைந்து 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சிறு வணிகம் குறித்த முக்கிய அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் மொத்த சிறு வணிகக் கடன் வெளியீடு என்பது ஆண்டிற்கு 19.3 சதவீதம் அதிகரித்து 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி 45.3 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 6.9 கோடி செயலில் உள்ள கடன்களுடன், இது ஆண்டிற்கு 8.7 சதவீதம் அதிகரித்து வருகிறது.
- மகாராஷ்டிரா 6.06 லட்சம் கோடி ரூபாயுடன் மிகப்பெரிய கடன் தொகுப்பினைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு 4.21 லட்சம் கோடி ரூபாயுடனும், குஜராத் 3.69 லட்சம் கோடி ரூபாயுடனும் அதைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.
- உத்தரப் பிரதேசத்தில் ஆண்டிற்கு 20.7 சதவீதம் என்ற அதிகபட்ச வளர்ச்சிப் பதிவாகி


உள்ளது என்பதோடு அதன் தொகுப்புக் கடன் நிலுவை 3.61 லட்சம் கோடி ரூபாயை எட்டி உள்ளது.

- மும்பை, டெல்லி மற்றும் பெங்களூரு ஆகியவை முறையே 4.4 சதவீதம், 3.8 சதவீதம் மற்றும் 3.0 சதவீதம் பங்களிப்புடன் மாவட்டங்களில் முன்னணியில் உள்ளன.
- நிலுவையில் உள்ள கடனில் 75 சதவீதத்திற்கும் அதிகமாகவும், செயலில் உள்ள கடன்களில் 85 சதவீதத்திற்கும் அதிகமாகவும் தனி உரிமையாளர்கள் பங்கு கொண்டு உள்ளனர் அதே நேரத்தில் நிறுவனங்கள் ஆண்டிற்கு 24.7 சதவீதமாக மிக உயர்ந்த தொகுப்புக் கடன் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

| | Jun'23 | Jun'24 | Jun'25 |
|---|---|---|---|
| Portfolio Outstanding (₹L Cr) | 31.3 | 38.0 | 45.3 |
| Y-o-Y Growth% | | 21.4% | 19.3% |
| Number of Active Loans (Cr) | 5.7 | 6.4 | 6.9 |
| Y-o-Y Growth% | | 11.9% | 8.7% |
| PAR 31-90% | 3.2% | 3.4% | 3.4% |
| PAR 91-180% | 1.8% | 1.4% | 1.5% |
| PAR 181-720% | 4.1% | 3.2% | 2.9% |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## SAMBHAV தகவல் தொடர்பு அமைப்பு




- இந்திய இராணுவம், சிந்தூர் நடவடிக்கையின் போது, உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட SAMBHAV (Secure Army Mobile Bharat Version) எனும் பாதுகாப்பான கைபேசி சூழல் அமைப்பைப் பயன்படுத்தியது.
- அதிகாரப்பூர்வ தகவல் தொடர்புக்காக, SAMBHAV தொலைபேசிகள் WhatsApp போன்ற

தளங்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டது.

- 5G தொழில்நுட்பத்தில் இயங்குகின்ற SAMBHAV, M-Sigma போன்ற உள்நாட்டுச் செயலிகளைப் பயன்படுத்தி முழுமையான மறைகுறியாக்கப்பட்ட தகவல் தொடர்புகளை வழங்குகிறது.
- M-Sigma என்பது WhatsApp ஊடகத்திற்கு மாற்றாக உருவாக்கப்பட்ட ஒரு பாதுகாப்பான செய்தியிடல் செயலியாகும் என்பதோடு இது ஆவணங்கள், படங்கள் மற்றும் ஒளிப் படங்களைப் பாதுகாப்பாகப் பகிர அனுமதிக்கிறது.
- SAMBHAV என்பது வலையமைப்பைச் சாராதது ஆகும் மற்றும் பல அடுக்கு குறியாக்கம் மற்றும் 5G நுட்பத்திற்குத் தயாரான கைபேசிகள் மூலமான நடவடிக்கை மூலம் இயங்கும் போது உடனடி இணைப்பை வழங்குகிறது.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற இந்தியா-சீனா இராணுவப் பேச்சுவார்த்தைகளின் போது SAMBHAV தொலைபேசிகளும் பயன்படுத்தப்பட்டன.

## AdFalciVax மலேரியா தடுப்பூசி




- இந்தியா உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனது முதல் பல-நிலை மலேரியா தடுப்பூசியை வணிகமயமாக்க இந்திய இம்யூனோலாஜிக்கல்ஸ் லிமிடெட், டெக்வின்வென்ஷன் லைஃப்கேர் பிரைவேட் லிமிடெட், பனாசியா பயோடெக் லிமிடெட், பயோலாஜிக்கல் இ லிமிடெட் மற்றும் சைடஸ் லைஃப்சயின்சஸ் ஆகியவற்றிற்கு உரிமம் வழங்கியுள்ளது.
- இந்தத் தடுப்பூசியானது இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) மற்றும் அதன் கூட்டாண்மை அமைப்புகளால் உருவாக்கப்பட்டது.
- இது ஒட்டுண்ணி, இரத்த ஓட்டத்தில் நுழைவதற்கு முன்பே அதனைக் குறி வைத்து அதன் பரவலைத் தடுக்கிறது.
- AdFalciVax எனப்படும் இந்தத் தடுப்பூசி, பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரத்திற்கு எதிராக வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் மலேரியா பரவலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளாவிய பாதிப்புகளில் 1.4% மற்றும் உயிரிழப்புகளில் 0.9% மலேரியா காரணமாக ஏற்படுகிறது என்பதோடு இந்தியாவின் 95% மக்கள் மலேரியா பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வாழ்கின்றனர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பல்லாஸ் பூனை





- அருணாச்சலப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட வனவிலங்கு கணக்கெடுப்பு, அம்மாநிலத்தில் அரிய பல்லாஸ் பூனையின் முதல் புகைப்பட ஆதாரத்தைப் பதிவு செய்தது.
- இங்கு பல்லாஸ் பூனை தென்பட்ட நிகழ்வானது, சிக்கிம், பூடான் மற்றும் கிழக்கு நேபாளத்தில் தென்படுவதற்கு முன்னதாக இது கிழக்கு இமயமலையிலும் காணப் படுகின்றது என்ற அதன் அறியப்பட்ட பரவல் வரம்பை விரிவுபடுத்தி உள்ளது.
- இந்த இனம் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் தீவாய்ப்பு கவலைக் குறைந்த இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## குழந்தை ஊட்டச்சத்து குறித்த அறிக்கை 2025

- யுனிசெஃப் வெளியிட்ட இந்த அறிக்கையானது, குழந்தைப் பருவ உடல் பருமன் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளில் உலகளாவிய அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது.
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 5 சதவீதத்திற்கும் அதிகமானோர் மற்றும் 5 முதல் 19 வயது வரையிலான குழந்தைகளில் 20 சதவீதத்தினர் தற்போது அதிக எடையுடன் வாழ்கின்றனர்.
- 2025 ஆம் ஆண்டில் பள்ளி வயது குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே உடல் பருமன் பாதிப்பு 9.4 சதவீதமாக இருந்தது.
- 2025 ஆம் ஆண்டில் அதே வயதினரிடையே எடை குறைபாட்டின் (உயரத்திற்கேற்ற எடையில்லாமலிருத்தல்) பாதிப்பு 9.2 சதவீதமாக இருந்தது.
- பாதிக்கப்பட்ட குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் மற்றும் தெற்காசியாவில் வாழ்கின்றனர்.
- தெற்காசியாவில், 2000 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 5 முதல் 19 வயதுடையவர்களிடையே அதிக எடை பாதிப்பு சுமார் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது.

- இந்தப் போக்குகளை அதிகளவில் பதப்படுத்தப்பட்ட உணவுகள் (UPF) மற்றும் சர்க்கரை பானங்களின் பரவல் மற்றும் சந்தைப்படுத்துதலுடன் இந்த அறிக்கை இணைக்கிறது.




## மாநிலச் செய்திகள்

### மும்பை உயர் நீதிமன்ற தற்காலிக அமர்வு




- இந்தியத் தலைமை நீதிபதி B.R. கவாய் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் தேதியன்று கோலாப்பூரில் மும்பை உயர் நீதிமன்றத்தின் தற்காலிக/சுற்று அமர்வினைத் திறந்து வைத்தார்.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி முதல் ஒரு ஈராயம் மற்றும் இரண்டு ஒற்றை அமர்வுகளுடன் இந்த அமர்வு செயல்பாட்டுக்கு வந்தது.
- இது கோலாப்பூர், சதாரா, சாங்லி, சோலாப்பூர், ரத்னகிரி மற்றும் சிந்துதுர்க் ஆகிய

ஆறு மாவட்டங்களின் அதிகார வரம்பைக் கொண்டிருந்தது.

- இதன் மூலம் மகாராஷ்டிராவில் கோலாப்பூரை நாக்பூர் மற்றும் ஔரங்காபாத்திற்குப் பிறகு மூன்றாவது சுற்று அமர்வாகவும், கோவாவில் உள்ள போர்வோரிம் உட்பட ஒட்டு மொத்தமாக நான்காவது இத்தகைய அமர்வாகவும் மாற்றியது.
- மும்பையில் உள்ள முதன்மை அமர்வினைத் தவிர, மும்பை உயர் நீதிமன்றத்தின் நிரந்தர அமர்வுகள் விதர்பாவில் உள்ள நாக்பூர் மற்றும் மராத்வாடாவில் உள்ள ஔரங்காபாத் (சத்ரபதி சம்பாஜிநகர்) ஆகியவற்றில் இருந்தன.
- மும்பை உயர் நீதிமன்றத்தின் மூன்றாவது அமர்வு அருகிலுள்ள கோவாவின் போர்வோரிமில் அமைந்தது.
- மும்பை உயர் நீதிமன்றம் மகாராஷ்டிரா மற்றும் கோவா மாநிலங்களுக்கும், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஒன்றியப் பிரதேசத்திற்கும் நீதிச் சேவையை வழங்கியது.
- இது 1861 ஆம் ஆண்டு இந்திய உயர் நீதிமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்தியாவின் பழமையான உயர் நீதிமன்றங்களில் ஒன்றாகும்.

## கேரளாவில் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம்




- மாதிரிப் பதிவுக் கணக்கெடுப்பின் (SRS) படி, 2023 ஆம் ஆண்டில் கேரளாவின் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (IMR) 1,000 பிறப்புகளுக்கு 5 ஆகக் குறைந்துள்ளது.
- இந்த IMR 25 என்ற தேசிய சராசரியை விட ஐந்து மடங்கு குறைவாகவும், அமெரிக்காவின் 5.6 IMR அளவினை விடவும் குறைவாகவும் இருந்தது.
- கேரளா இந்தியாவில் ஒற்றை இலக்க IMR கொண்ட மற்றும் குழந்தை இறப்பில் நகர்ப்புற-கிராமப்புற வேறுபாடு இல்லாத ஒரே மாநிலமாக இருந்தது.
- கேரளா முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் ஒற்றை இலக்க IMR அளவினை அடைந்தது என்பதோடு 2019 ஆம் ஆண்டில் அது 6 ஆகவும் 2023 ஆம் ஆண்டில் 5 ஆகவும் குறைந்தது.
- கேரளாவில் முன்னதாக ஆண்டுதோறும் சுமார் 5–5.5 லட்சம் பிறப்புகள் பதிவானது, ஆனால் 2023 ஆம் ஆண்டில் 3,93,231 பிறப்புகள் மட்டுமே பதிவானது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பதிவாகும் பிறப்புகளின் எண்ணிக்கை தோராயமாக 3.54 லட்சமாகக் குறையும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

- கேரளாவில் 2021–22 ஆம் ஆண்டினைத் தவிர, ஆண்டுதோறும் சராசரியாக 120–140 என்ற பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் பதிவானது.
- SRS புள்ளி விவரங்களின் அடிப்படையில், மிகக் குறைந்த MMR கொண்ட இந்திய மாநிலங்களில் கேரளா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகியவை முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஸ்வச் வாயு சர்வேக்சன் விருதுகள்




- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது ஸ்வச் வாயு சர்வேக்சன் விருதுகள் மற்றும் 2025 ஆம் ஆண்டு ஈரநில நகரங்கள் அங்கீகார விழாவினை நடத்தியது.
- தேசியத் தூய்மை காற்று திட்டத்தின் (NCAP) கீழ், மூன்று மக்கள் தொகை அடிப்படையிலான பிரிவுகளில் தூய்மையான காற்று முன்னெடுப்புகளுக்காக 11 நகரங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன என்ற நிலையில் இதில் இந்தூர், ஜபல்பூர், ஆக்ரா மற்றும் சூரத் ஆகியவை முதல் வகையில் முன்னணியில் உள்ளன.
- இந்தூர் 200/200 மதிப்பெண் பெற்று 1.5 கோடி ரூபாய் பெற்றது; அமராவதி இரண்டாம் வகையில் முதலிடத்தையும், தேவாஸ் மூன்றாம் வகையில் முன்னிலையையும் வகித்தது.
- இந்தூர் மற்றும் உதய்பூர் ராம்சர் உடன்படிக்கையின் கீழ் ஈரநில நகர அங்கீகாரத்தைப் பெற்றன என்பதோடு இது 91 ராம்சர் தளங்களுடன் இந்தியாவை ஆசிய அளவில் முன்னணியில் வைத்தது.
- அரசாங்கம் வார்டு அளவிலான கணக்கெடுப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் தொகுப்பினை வெளியிட்டதோடு மேலும் 75 கோடி மரங்களை நட்டு 75 நகர்ப்புறக் காடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PRANA போன்ற எண்ணிமத் தளங்கள் இதன் முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகின்றன என்பதோடு மேலும் Mission LiFE மற்றும் Amrit Sarovar ஆகியவை நிலையான நீர் மற்றும் வாழ்க்கை முறை முன்னெடுப்புகளை ஆதரிக்கின்றன.

# முக்கிய தினங்கள்

## உலக உடல் சிகிச்சை தினம் 2025 - செப்டம்பர் 08




- ❖ மக்கள் காயத்திலிருந்து மீள்வதற்கும், வலியை குறைப்பதற்கும், அவர்களின் இயக்கத்தை மீட்டெடுப்பதற்கும் உடலியக்க மருத்துவர்கள் வகிக்கும் முக்கியப் பங்கை இது அங்கீகரிக்கிறது.
- ❖ 1951 ஆம் ஆண்டில் உலக உடலியக்க சிகிச்சை அறக்கட்டளை நிறுவப்பட்ட தேதியை நினைவு கூரும் விதமாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Healthy Ageing" என்பதாகும்.

## சர்வதேசக் காவல்துறை ஒத்துழைப்பு தினம் 2025 - செப்டம்பர் 09




- ❖ இந்த நாள் உலகளாவிய பாதுகாப்பில் உலகின் சட்ட அமலாக்கச் சமூகத்தின் அத்தியாவசியப் பணிகளை அங்கீகரிக்கிறது.
- ❖ இது 2023 ஆம் ஆண்டில் முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ICT and AI in policing" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★